# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032.**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 131/மா/2018**
**ஆணை நாள்: 04–09–2019**

திரு. மான் பகதூர்,
சென்னை – 600 004. – முறையீட்டு மனுதாரர்

திரு. நாகராஜன்,
உதவிப் பொறியாளர்,
மண்டலம் - 9,
சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

சென்னை, மயிலாப்பூர், வைத்தியர் அண்ணாமலைத் தெரு, எண்.19/10ல் வசிக்கும் மான்பகதூர் என்பவருடைய 11.6.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.131/மா/2018 ஆக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு சம்பந்தமாக பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலரின் அறிக்கை, விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் அளித்த வாக்குமூலம் மற்றும் உதவி பொறியாளர் அவர்கள் அளித்த வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை:

சென்னை, மயிலாப்பூர், வைத்தியர் அண்ணாமலைத் தெரு, எண்.19/10ல் வசிக்கும் திரு. மான்பகதூர் என்பவர் தனது 11.6.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில், அவருக்கு சொந்தமான இராஜா அண்ணாமலைபுரம், வன்னியம்பதி தெரு, பழைய எண்.30, புதிய எண்.4/2ல் உள்ள 368 சதுர அடி இடம் மற்றும் அதிலுள்ள 300 ச.அடி கட்டிடம் வாங்கி புதுப்பிக்க இருந்த நிலையில், தனது வீட்டிற்கு கிழக்கில் இருக்கும் C. இராஜேந்திரன் என்பவர் அவருடைய வீட்டிற்கு திட்ட அனுமதி ஏதும் வாங்காமல், தன்னுடைய வீட்டிற்கு திட்டஅனுமதி வாங்கவில்லையென சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.25397/2016 வழக்கு தொடுத்து, அதன்பேரில் சென்னை உயர்நீதிமன்றம் தனது 27.1.16 நாளிட்ட தீர்ப்பில் இப்பொருள் தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகள்

கவனம் செலுத்தி சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளவும், இவ்வழக்கு சிவில் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் அங்கேயே தீர்த்துக்கொள்ளலாம் எனவும் உத்தரவிடப்பட்டது. இதன் மீது மீண்டும் C. இராஜேந்திரன், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தார் என்றும், அதில் தன்னையும் பார்ட்டியாக சேர்க்க உயர்நீதிமன்றத்தில் மனு செய்ததின் பேரில், சென்னை உயர்நீதிமன்றம் தனது 15.3.2018 நாளிட்ட உத்தரவில், மாநகராட்சி அதிகாரிகளை விசாரணை நடத்துமாறும், அதில் விண்ணப்பத்தாரருக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குமாறும் ஆணை பிறப்பித்தது என்றும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் மேற்படி இராஜேந்திரன் அவர் செய்த தவறை மறைக்க மீண்டும் W.P.No.23582/2017 ஐ சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்து இடைக்கால தடை உத்தரவு பெற்றது போன்று பொய் தகவல்களை கூறி வருகிறார் என்றும், எந்த ஒரு நீதிமன்றமும் அவர் வீட்டிற்கு Lock & Seal Notice வைக்க உத்தரவு பிறப்பிக்காத நிலையில், மாநகராட்சி உதவி பொறியாளர் திரு. நாகராஜன் வீட்டிலுள்ளவர்களிடம் Lock & Seal Notice அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார் என்றும், இதில் உதவி பொறியாளர், C. இராஜேந்திரன் அவர்களுக்கு சாதகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்றும், கடந்த 1.6.2018 அன்று, காவல் நிலையத்தில் பொய் தகவல் கூறி, பாதுகாப்பிற்கு காவலர்களை அழைத்துக் கொண்டு, வீட்டிற்கு சீல் வைத்தது போன்றும், அதை தான் உடைத்தது போன்றும் சித்தரித்து மற்றவர்கள் மத்தியில் அவமானம் செய்ததாகக் கூறி, அவர்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

21.8.2018 நாளிட்ட இம்முறைமன்ற அழைப்பாணையின் பேரில் 15.10.2018 அன்று முறையீட்டு மனுதாரர் திரு. மான் பகதூர் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் இராஜஅண்ணாமலைபுரம் வன்னியம்பதி தெரு, பழைய எண். 30, புதிய எண்.4/2ல் பழைய வீடு விலைக்கு வாங்கி அதில் 368 சதுரடியில் வீடு கட்ட பிளான் அப்ரூவல் கோரியதாகவும். ஆனால் 368 சதுர அடிக்கு பிளான் அப்ரூவல் வழங்க இயலாது என தெரிவித்து விட்டனர் என்றும், தனது, பக்கத்து வீட்டுக்காரர் தன் மீது அனுமதி இல்லாமல் வீடு கட்டுவது தொடர்பாக சிவில் கோர்ட்டில் O.S No. 6483/15 எண்ணிட்ட வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், மேலும் பிளான் அப்ரூவல் இல்லை எனக் கூறி சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No. 25397/2016 தாக்கல் செய்தார் என்றும், அவ்வழக்கில் உயர்நீதிமன்றம், சென்னை மாநகராட்சி அதிகாரிகளை கவனம் செலுத்தி சட்டரீதியாகவும் நடவடிக்கை மேற்கொள்ளவும் இவ்வழக்கு சிவில் நீதிமன்றத்திலும் நிலுவையாக இருப்பதால் அங்கேயே தீர்த்துக்கொள்ள உத்திரவிட்டது என்றும், அதனைத் தொடர்ந்து ராஜேந்திரன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் தொடர்ந்தார் என்றும், அதில் தன் பெயரும் தன் மனைவி பெயரும் சேர்க்கப்படவில்லை எனினும் தானே முன்வந்து தன்னையும் தன் மனைவியையும் அவமதிப்பு வழக்கில் பார்ட்டியாக சேர்க்க வேண்டும் என கேட்டுக் கொண்டதின் பேரில் தங்களையும் விசாரணை செய்யுமாறு ஆணையிடப்பட்டது என்றும், 9வது மண்டல அலுவலகத்தில் A.C அவர்கள் விசாரணை செய்ததில் இதில் ஒன்றும் இல்லை என்று தங்களை அனுப்பி விட்டார் என்றும், தன்னிடம் A.E திரு. நாகராஜன் என்பவர் ரூ.60 ஆயிரம் கேட்டார் என்றும் , தான் கோவிலில் காவலாளியாக வேலை பார்ப்பதால் தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னதாகவும், ஆனால் A.E திரு. நாகராஜன் என்பவர் திரு. ரவி என்பவரை அனுப்பி பத்து ஆயிரம் ரூபாய் கொடுக்க கேட்டுக் கொண்டதன் பேரில் திரு. ரவி என்பவரிடம் பணம்

கொடுக்கப்பட்டது என்றும், ஆனால் A.E திரு. நாகராஜன், தன் கைக்கு பணம் வரவில்லை என்று சொன்னார் என்றும், எந்தவித முன்னறிவிப்பும் செய்யாமல் என் வீட்டில் உள்ளவர்களை வெளியேற்றி வீட்டை பூட்டி விட்டார் என்றும், பின்னர் அவரே பூட்டை திறந்து விட்டு, தான் பூட்டை உடைத்ததாக தன்மீது காவல் நிலையத்தில் புகார் செய்தார் என்றும், வீடு தன்னுடைய பொறுப்பில் தான் உள்ளது என்றும், Lock & Seal வைக்க சொல்லி எந்த நீதிமன்றத்திலும் ஆணை வழங்கவில்லை என்றும் அவர் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி உள்ளார் எனத் தெரிவித்து அவருடைய தொல்லையால் ஐந்து மாதம் வீடு காலியாக உள்ளதால், கடனுக்கான வட்டி செலுத்த முடியாமல் கஷ்டப்படுவதாக தெரிவித்து தக்க நடவடிக்கை மேற்கொண்டு எந்தவித தொல்லையும் இல்லமால் சட்டரீதியாக வீட்டில் குடியிருப்பதற்கு வழிவகை செய்யுமாறு முறையிட்டார்.

<u>சென்னை மாநகராட்சி 9வது மண்டல உதவி பொறியாளர், திரு. நாகராஜன் 1.11.2018ல் ஆஜராகி அளித்த வாக்கு மூலத்தில் திரு. மான் பகதூர் அவர்களின் பக்கத்து வீட்டுக்காரர்</u> திரு. C. ராஜேந்திரன் என்பவர் மாநகராட்சிக்கு அளித்த 26.10.2015 நாளிட்ட கடிதத்தில் திரு. மான் பகதூர் பொது வழியில் 3 அடி படிகட்டு கட்டி ஆக்கிரமித்தும், தரை தளம் மற்றும் இரண்டு தளங்கள் கட்டியுள்ளார் எனத் தெரிவித்து நடவடிக்கை எடுக்க கோரியிருந்தார். பின்னர் இப்பொருள் தொடர்பாக அன்னார் O.S.No. 6483/2015 என்ற வழக்கை City Civil Courtல் வழக்கு தொடர்ந்தார் என்றும், அவ்வழக்கில் திரு. மான் பகதூர் ஆஜராகாததால் Ex-Parte ஆகி அவர்கள் இருவருமே பேசி முடிவு செய்துக்கொள்ளலாம் என 11.8.2015ல் உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், இந்நேர்வில் இருவரும் ஒத்துப்போகாததால் திரு. C. ராஜேந்திரன் என்பவர் 27.6.2016 அன்று உயர்நீதி மன்றத்தில் W.P.No. 25347/2016 முறையீடு செய்ததின் பேரில் உயர்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பித்தது என்றும் தெரிவித்தார்:-

" Since already the matter is pending before the civil Court in this regard, it is for the petitioner to take out on appropriate application and to urge all the contentions before the civil court for redressal of his grievance. In the meanwhile, the respondent Corporation can also look into the matter and take a decision in accordance with law. With this observation, the writ petition stands disposed of. No costs."

மேலும், அதன் பின்னர், திரு. மான் பகதூர் அவர்களின் கட்டிடத்தை ஆய்வு செய்து அக்கட்டிடத்திற்கு அனுமதி இல்லை எனக் கண்டறிந்து 26.6.2017 அன்று Calling for Approval என்ற நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது என்றும், பின்னர் திரு. மான் பகதூர் என்பவர் 28.6.2017 அன்று திரு. C. ராஜேந்திரன் கட்டிடத்திற்கு அனுமதி இல்லை என்றும், Set Back இல்லை என்றும் புகார் அளித்ததின் பேரில் 4.7.2017ல் ஆய்வு செய்து 5.7.2017 அன்று Calling for Approval என்ற நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது என்றும், இருவரும் பிளான் அப்புருவல் கொடுக்காத காரணத்தால் 21.7.2017 அன்று இருவரும் மண்டல அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜரானார்கள் என்றும், திரு. மான் பகதூர் தன்னிடம் பிளான் அப்ருவல் இல்லை எனவும் திரு. ராஜேந்திரன் வழக்கறிஞர் மூலம் பிளான் அப்பூருவல் நகல் கொடுத்தனுப்புவதாக தெரிவித்தார் என்றும், ஆனால் இருவரும் பிளான் காப்பி கொடுக்காத காரணத்தினால் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என இறுதி

ஆணையின் நகல் **26.7.2017** அன்று பிறப்பிக்கப்பட்டு, இருவருக்கும் **29.7.2018** அன்று Lock & Seal Notice கொடுக்கப்பட்டது. இதற்கிடையில் திரு. C. ராஜேந்திரன் என்பவர் நீதிமன்றத்தில் வழக்கு எண். (W.P.No.23582/2017) தொடுத்து, **31.8.2017**ல் திரு. C. ராஜேந்திரன் கட்டிடத்தின் மீது Lock & Seal Notice கொடுத்ததினால் நடவடிக்கை மேற்கொள்ளாதிருக்க Stay Order வாங்கினதினால் அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளாமல் நிறுத்தி வைக்கப்பட்டது என்றும் தெரிவித்தார்.

பின்னர், திரு. மான்பகதூர் மீது De Occupation Notice 7.2.2018 அன்று கொடுக்கப்பட்டது என்றும், இதற்கிடையில் திரு. ராஜேந்திரன் என்பவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என நீதிமன்ற அவமதிப்பு வழக்கு (Contempt Petition No.292/2017) தொடுத்துவிட்டார் என்றும், இரண்டாவது முறை திரு. மான் பகதூர் மீது **20.3.2018** அன்று கடிதம் அனுப்பி **23.3.2018** அன்று ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது என்றும், ஆனால் அவர் விசாரணைக்கு வரவில்லை என்றும், இதனிடையில் சென்னை மாநகராட்சி ஆணையர் ஒப்புதல் பெற்று திரு. மான் பகதூர் வீட்டின் மீது Lock and Seal ஆணை பிறப்பிக்கப்பட்டதன் பேரில் சீல் வைக்க செல்லும் பொழுது, திரு. மான் பகதூர் என்பவர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஒரு வாய்ப்பு தருமாறு Sub Application No. 122 of **2018** தொடுத்தன் பேரில் அன்னாருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது என்றும், அதன்படி திரு. மான் பகதூர் என்பவர் **18.4.2018** அன்று நேரில் ஆஜராகி அவருடைய **384** சதுர அடிக் கொண்ட கட்டித்திற்கு பிளான் அப்பூருவல் கோரியிருந்தார் என்றும், அதற்கு மண்டல அலுவலகத்தில் அவரது பிளான் அப்ரூவலுக்காக கோரிய செயல் அத்தருணத்தில் முரன்பாடான வேண்டுகோள் என்றும் ஏற்புடையதாக இல்லை மற்றும் காலம் கடந்த செயல்பாடாக உள்ளது என்றும், சென்னை மாநகராட்சி நடவடிக்கைகளை திசை திருப்பும் வகையில் அவரது கோரிக்கை உள்ளதாக நிராகரிக்கப்பட்டு நீதிமன்ற ஆணைப்படி 29.5.2018 அன்று வீட்டிற்கு Lock and Seal வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு, 1.6.2018 அன்று காவல் துறையின் பாதுகாப்புடன் மூன்று தளங்களுக்கும் சீல் வைக்கப்பட்டது என்றும், அதன் விவரம் மாநகராட்சி ஆணையர் மூலம் உயர் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டு அதன் பேரில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முடிவுற்றது எனத் தெரிவித்தார்.

7.6.2018 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்ட வீட்டை ஆய்வு செய்ததில் மேற்படி வீடு சீல் உடைக்கப்படப்பட்டு மனுதாரர் உள்ளே சென்றுள்ளார் எனத் தெரியவந்ததின் பேரில், காவல் துறைக்கு புகார் கடிதம் கொடுக்கப்பட்டதன் பேரில் 14.6.2018 அன்று FIR No. 369/2018 பதிவு செய்து, நகல் வழங்கப்பட்டது என்றும் அதற்கு பின்னர் மனுதாரர் மீது காவல் துறையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்தார். மேலும் இத்தகைய நீதிமன்ற ஆணை, ஆணையரின் ஆணை, துணை ஆணையரின் ஆணை மற்றும் மேல் அதிகாரிகளின் ஆணையின்படியே இக்கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுத்து வந்ததாகவும், தன்னிச்சையாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்தார். மனுதாரர் 13.6.2018 அன்று சென்னை மாநகராட்சியில் உள்ள இலஞ்ச ஒழிப்பு துறைக்கு தன் மீது வழங்கப்பட்ட புகார் கடிதத்திற்கு, அனைத்து ஆவணங்களுடன் 4.10.2018 அன்று பதில் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்து, தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்நேர்வில், முறையீட்டு மனுதாரர் திரு. மான் பகதூர் என்பவர் சென்னை, இராஜா அண்ணாமலைபுரம் வன்னியம்பதி தெரு, கதவு எண்.4/2 இல் உள்ள 368 சதுர அடி நிலம் மற்றும் அதிலுள்ள 300 சதுர அடி கட்டிடத்துடன் 2015-ஆம் ஆண்டு கிரையம் பெற்று அதன் மீது இரண்டு தளங்கள் அனுமதியின்றி கட்டப்படுவது மற்றும் பொது வழியை ஆக்கிரமித்து படிகட்டு கட்டுவதை மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் அவரின் பக்கத்து வீட்டுக்காரர் திரு. C. இராஜேந்திரன் என்பவர் தொடுத்த பல்வேறு வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கிணங்கவே பெருநகர சென்னை மாநகராட்சி உதவி பொறியாளர், மனுதாரர் மற்றும் C. இராஜேந்திரன் ஆகியோர்களின் கட்டிடங்களின் மீது மேல் நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரிய வருகிறது. உதவி பொறியாளர், மனுதாரர் மீது காழ்ப்புணர்ச்சியோடு செயல்பட்டார் என்பதற்கான ஆதாரம் ஏதுமில்லை. எனினும் கட்டிட அனுமதியற்ற கட்டிடங்கள் குறித்து தனி நபர் ஒருவர் மாநகராட்சியின் மீது வழக்கு பதிவு செய்து, அதன் மீது ஆணை பெறும்வரை நடவடிக்கை எடுக்காமல் இருந்தது கண்டிக்க தக்கது. இனி வருங்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் பாதுகாத்துக்கொள்ளுமாறு திரு. நாகராஜன் உதவி பொறியாளரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. மான் பகதூர்,
   எண்.19/10, வைத்தியர் அண்ணாமலைத் தெரு,
   மயிலாப்பூர்,
   சென்னை – 600 004.
2. திரு. நாகராஜன்,
   உதவிப் பொறியாளர்,
   மண்டலம் - 9,
   சென்னை மாநகராட்சி.
3. மண்டல அலுவலர்,
   9-வது மண்டலம், பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.4, 4-வது குறுக்குத் தெரு,
   லேக் வியூ சாலை, சென்னை -600 034.

நகல்

**முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**செயலர் அவர்களின் நேர்முக எழுத்தர்,**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**இ. கோ. / உதரி**